செய்தி வெளியீடு எண்: 248 / 2018 நாள்: 28.04.2018

**கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் 135 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் மற்றும் மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் வழங்கினார்கள்.**

வேலூர் மகளிர் திட்ட ஏலகிரி அரங்கில் கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் 135 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் மற்றும் மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்கள் பேசியதாவது:-

கிராம சுவராஜ் திட்டத்தின் மூலம் 14.04.2018 முதல் 05.05.2018 வரை மத்திய மாநில அரசுகளின் துறைசார் நலத்திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில், தினமும் ஒரு நிகழ்ச்சி மூலம் ஒவ்வொரு துறை சார்பாக நலத்திட்ட உதவிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. வேலூர் மாவட்டம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாவட்டம். இச்சிறப்பு மிக்க மாவட்டத்தில் மக்களின் வாழ்க்கை பொருளாதார நிலை உயர அரசு திட்டங்கள் வழியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வேலூர் மாவட்டத்தில் அரசு திட்டஙகள் எல்லாம் சிறப்பாக பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கிராமத்தின் வளர்ச்சி கிராமத்தில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்து அடுத்த தலைமுறை சிறப்பாக வாழ இப்பொழுதே நடவடிக்கை மேற்கொள்ள உறுதி எடுத்து அரசின் குறிக்கோள் வெற்றியடையும் வகையில் செயல்பட வேண்டும் இன்று நலத்திட்ட உதவிகள் பெறும் பயனாளிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

கிராம சுவராஜ் திட்டத்தின் மூலம் மத்திய அரசின் திட்டங்கள் நிலுவையில் உள்ள 74 கிராமங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து துறை திட்டங்கள் நிறைவேற்றிட இந்த கால கட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களால் ஒவ்வொரு தினமும் நிகழ்வுகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் பல்வேறு அரசுத்துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைப்பெறுகிறது. இவற்றை பொதுமக்கள் பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

20 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 100 பயனாளிகளுக்கு பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட ஆணைகளையும், வேளாண்மைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்களையும், வருவாய்த்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு சான்றிதழ்களையும், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் 10 பயனாளிகளுக்கு எல்.இ.டி. பல்புகளையும், வழங்கல் துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பினையும் மொத்தம் 145 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, மகளிர் திட்ட இயக்குநர் திரு.சிவராமன், இணை இயக்குநர் வேளாண்மை(பொ) திருமதி.சுப்புலட்சுமி, முன்னோடி வங்கிகளின் மேலாளர் திரு.தாமோதரன் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர்-9.